முருகப்பெருமான் துணை

**மகான் பிருகுமகரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.08.2023**, வியாழக்கிழமை

1. தவபலமிக்க ஞான தேசிகா
தருமனாக வாழும் அரங்கா
அவதார உன் நோக்கம் நிறைவேற
அருளுவேன் பிருகுமகரிஷி யானும்
2. யானும் அறிவுரை ஆசிதன்னை
உயர்வான சோபகிருது நள்ளி திங்கள்
ஞானமுற மூவாறு திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 18 ம் நாள், 03.08.2023, வியாழக்கிழமை)
ஞானவான்களாக மக்கள் தேற உரைப்பேன்
3. உரைப்பேன் சன்மார்க்க நெறி
உலகம் தனை ஆளும் காலம்
குறைவின்றி சடுதி நிகழவிருக்க
குவலயத்தார் அரங்கன் திருவடி பற்றி
4. பற்றியே ஞானம் பயின்று
பரோபகார தயவுப் பெருக
ஆற்றல்பட அன்னதானமெனும்
அறநெறியை மக்கள் ஏற்று
5. ஏற்று இயன்ற வண்ணம்
இவ்வுலகினில் செய்து வருக
மாற்றம் தானும் இலகுவாய்
மகான் அரங்கன் வழிகாட்டலில்
6. வழிகாட்டலில் தெளிவுகிட்டி
வரமாக ஞானவான் எனும்
அழியாமை நிலை அடைவர்
ஆறுமுகனார் சரவண சோதி வழிபாடு

7. வழிபாடு தொடருவது தன்னால்
வருங்காலம் வடிவேலன் காட்சி
தெளிவுபெற அடைந்து நன்கு
தேறுவர் எல்லா சக்தியுமாக
8. ஆகவே அற்புதம் நிகழ்த்தும்
அகிலம் மாற்றும் சக்திகளாக
வகைபடத் தேறி நிற்பர்
வருங்காலம் கலித்துன்பங்களை
9. துன்பங்களை விரட்டியே
தெரிவிப்பேன் ஞானிகளாக
இன்பமுற அரங்கன் ஆசிபட
இணையிலா ஞானத் தலைமை
10. தலைமை படைத்து சிறந்து
தலைவன் முருகப் பெருமானே
ஆளுமை தரும் ஞான ஆட்சி
அகிலத்தில் நிறுவிடுவர்
11. நிறுவிட நீதி ஆட்சி
நிலவுலகம் பாதுகாப்புகொண்ட
தரும ஞான ஆட்சியுமாகவே
தனிப்பெரும் மாற்றம் கண்டடையும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—